**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**அ.வ.எண். 123/2022**

**வாக்குமூலம்: பி.வா.சா.ஆ.2 – நிசாந்தி**

**15.06.2026 : சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் 5, 6, 7, 8 லக்கச் சொத்துக்கள் எனது கணவரும், எனது மாமனாரும் சேர்ந்து சிற்பக் கலை தொழில் செய்யும் காலி மனை இடம் ஆகும். மேற்படி வழக்குச் சொத்துக்களில் 5,6,7,8 லக்கச் சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது மாமனார் மற்றும் மாமியார் பெயரில் உள்ளது. 5 லக்கச் சொத்து எந்த வருடம் வாங்கியது என்றால் வருடம் ஞாபகமில்லை. வழக்கு சொத்துக்களில் 5, 6, 7, 8 லக்கச் சொத்துக்கள் வாங்கும் போது எனது கணவரின் வயது என்ன என்றாலும் அப்போது அவர் என்ன வருமானம் வாங்கி வந்தார் என்றாலும் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி சொத்துக்களை யார், யாரிடமிருந்து எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவரும், எனது மாமனாரும் சேர்ந்து தொழில் செய்ததற்கு ஆதரவாக ஆவணம் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

2. நான் நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவர் சிற்பங்கள் செய்வதற்காக கனடா சென்று பயிற்சி வகுப்பு முடித்தார் என்று கூறியுள்ளேன். அதற்கு ஆதரவாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 4 வது லக்க சொத்து 1 ஆம் வாதியின் தாயார் சொத்து என்றால் 1 ஆம் வாதியின் தாயார் பெயரில் இருந்தது. அதன்பின் என் கணவருடைய பாட்டி என் கணவர் பெயரில் உயில் எழுதி வைத்துள்ளார். அந்த உயில் சம்பந்தமாக ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் அது எனது மாமனாரிடம் தான் உள்ளது. உயில் எழுதப்பட்ட தேதி தெரியுமா என்றால் தேதி தெரியவில்லை. நான்கு வருடங்களுக்கு முன்னால் பார்த்ததால் ஞாபகமில்லை. எந்த வருடத்தில் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயிலில் யார், யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது.

3. அந்த உயில் ஆவணத்தை யார் தயாரித்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயிலில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயில் சட்டப்படி பதியப்பட்டுள்ளதா அல்லது பதியப்படாத உயிலா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.டெக்., ஐ.டி படித்துள்ளேன். மேற்படி உயிலானது பத்திரத்தில் எழுதப்பட்டதா அல்லது வெறும் பச்சைத்தாளில் எழுதப்பட்டிருந்தா என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி உயிலில் தாவா 4 வது லக்கச் சொத்துக்கு யார் உரிமையாளர் என்று குறிப்பிட்டிருந்தது என்றால் எனது கணவரின் பாட்டிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டிருந்தது.

4. என் கணவரின் பாட்டியின் பெயர் தெரியுமா என்றால் மகமாயி அம்மா சரியாக ஞாபகமில்லை. நான் நிரூபண வாக்குமூலத்தில் 1ஆம் வாதியும், எனது கணவரும் மனஒற்றுமையுடன் தொழில் செய்து வந்தார்கள் என்று எதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் எனக்கு திருமணம் நடப்பதற்கு முன்பு அதன் பின்னரும் எனது கணவரும், எனது மாமனாரும் கலந்து யோசித்து தான் முடிவு எடுப்பார்கள். திருமணத்திற்கு முன்பு எனது கணவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. எனது நண்பர் ஆவார். திருமணத்திற்கு பிறகு எங்களுக்கும், வாதிகளுக்கும் இடையே தொடந்து பிரச்சனை ஏற்பட்டதால் தாவா சொத்துக்களை விட்டு தனியாக சென்று விட்டோம் என்றால் எங்களுக்கும், வாதிகளுக்கும் பிரச்சனை இல்லை. எங்களுக்கும் வாதிகளின் மகள் மகள் சாவித்ரியுடன் பிரச்சனை ஏற்பட்டதால் தான் தனியாக சென்று விட்டோம்.

5. சாவித்ரி அவர் கணவருடன் எங்கே வசித்து வருகிறார் என்றால் அவர் திருச்சியில் வசித்து வருகிறார். அவ்வப்போது வாதிகள் வீட்டிற்கு விடுமுறை நாட்களில் வந்து செல்வார். வாதிகளின் மருமகன் சிவசாமி எங்கு சிற்பக் கூடம் வைத்துள்ளார் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி சிவசாமி அவர்கள் எனது கணவருக்கும், வாதிகளுக்குமிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் அதற்கு ஆதரவாக காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றோம். ஆனால் காவல் நிலையத்தில் சமரசம் பேசி அனுப்பி விட்டார்கள். எனது கணவருக்கும், வாதிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சனையால் வாதிகள் எனது கணவர் மீது 20க்கும் மேற்பட்ட முறை பழனி நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரிந்த வரை புகார் ஏதும் கொடுக்கவில்லை.

6. எனது கணவர் பெயரில் உள்ள இடம் 1ஆம் வாதியின் இடத்திற்கு கிழக்குப் பக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் இடத்திற்கு தெற்குப் பக்கம் என்ன உள்ளது தெரியாது. மேற்கு பக்கம் வாதிகள் இடம் உள்ளது. வடக்குப் பக்கம் ரைஸ் மில் உள்ளது. எனது கணவர் இடத்திற்கு தெற்குப் பக்கம் என்ன உள்ளது என்றால் யார் இடம் என்று தெரியாது. அங்கு முட்புதர் தான் உள்ளது. சுமார் எத்தனை வருடங்களுக்கு முன்பு என் கணவர் இடத்தை பார்வையிட்டேன் என்றால் 4 வருடங்கள் இருக்கும். சிற்பக்கலை செய்யும் இடத்தில் முகம் செய்யும் வேலை எத்தனை பேர் செய்து வருகிறார்கள் என்றால் எனது கணவரும், எனது மாமனாரும் செய்து வருகிறார்கள். மேற்படி சிற்பக் கலைக்கூடத்தில் முகம் செய்யும் வேறு யார் செய்து வருகிறார்கள் என்றால் என் கணவரும், மாமனார் மட்டும் தான்.

7. வழக்குச் சொத்துக்களான 1 முதல் 8 லக்கச் சொத்துக்கள் அனைத்தும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டதா என்றால் 4ஆம் லக்கச் சொத்துக்கள் மட்டும் எனது கணவரின் பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். எனது கணவரின் பாட்டி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. எனது கணவரின் பாட்டிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனது மாமனார் ஒருவர் தான். 1ஆம் பிரதிவாதி எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது கணவரின் பாட்டி நான் சொல்வது போல் உயில் ஏதும் எழுதி வைக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.06.11 17:25:57 +0530

District Munsif,
Palani.